**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**
(Chapter XXIII Cr.P.C)

**CMP.NO.41/2026**

**WITNESS NO.–1**

**Date: 17.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஜோதி கமலபிரபா | வயது | 38 |
| கணவர்/தந்தை பெயர் | சிவனேசன் | தொழில் | – |
| கிராமம் | கேளம்பாக்கம் | வட்டம் | திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **17th day of April, 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>பிரமாண வாக்குமூலம் –</u>**

1. நான் என்னுடைய கணவர் எதிர்மனுதாரர் சிவனேசன் என்பவருக்கு எதிராக கு.வ.எண்.12/2024 வழக்கை தாக்கல் செய்து, என்னுடைய இளவர் மகள் லக்ஷனா என்பவருக்கு பராமரிப்பு தொகை, பாதுகாப்பு கட்டளை உள்ளிட்ட பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளேன். அவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், நான் இளவர் லக்ஷனா என்பவரின் கல்வி கட்டணம், மருத்துவ செலவு மற்றும் சிறப்பு செயற்பாடுகள் ஆகியவற்றிக்காக இடைக்கால மாத பராமரிப்பு தொகை வழங்க கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக கு.ப.ம.எண்.1043/2025 தாக்கல் செய்தேன்.

2. அம்மனு கடந்த 29.10.2025 அன்று இந்நீதிமன்றத்தால் பகுதியாக அனுமதிக்கப்பட்டது. ஆனால் இந்நீதிமன்ற உத்தரவை எதிர்மனுதாரர் இதுநாள்வரையில் செயல்படுத்தவில்லை. SSY திட்டத்தின் கீழ் எதிர்மனுதாரர் டிசம்பர் 2024 முதல் மார்ச் 2025 காலத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.25,000/–, இளவர் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய இடைக்கால பராமரிப்பு தொகை டிசம்பர் 2024 முதல் டிசம்பர் 2025 வரையில் அவர் மொத்தம் ரூ.4,94,000/– தரவேண்டும். ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 காலத்திற்கு மாந்தோறும் தலா ரூ.19,000/– மும், SSY திட்டத்திற்கு ரூ.6,250/–ம் தற்போது செலுத்தி வருகிறார்.

3. இளவர் மனுதாரரின் மருத்துவ காப்பீட்டு தொகை ரூ.23,617/– செலுத்த வேண்டும், அதையும் எதிர்மனுதாரர் செலுத்தவில்லை. எனவே, எதிர்மனுதாரர் மேற்கண்ட உத்தரவின் படி, ரூ.6,18,617/– தொகை செலுத்த வேண்டும். ஆனால் நாளது தேதி வரையில் மேற்கண்ட உத்தரவை முழுமையாக நிறைவேற்றாததால், அவர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

4. மேற்கண்ட உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர் மேல்முறையீட்டு மனுவை காலதாமதத்துடன் தாக்கல் செய்துள்ளதாக எனக்கு செங்கல்பட்டு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்தது. மேற்கண்ட மனு நிலுவையில் உள்ளது. எனவே, இத்தனிநபர் புகாரை கோப்பிற்கு எடுத்து, எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்து, விசாரணை செய்து உரிய தண்டனை வழங்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur